CNR NO: TNTH13-010992-2022

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், போடிநாயக்கனூர்.

**முன்னிலை : திரு.M.நல்லகண்ணன், B.Com., B.L.,**
நீதித்துறை நடுவர், போடிநாயக்கனூர்.

2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 07-ஆம் நாள் வெள்ளிக்கிழமை

சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்: 857/2022

நாகம்மாள் ..... புகார்தாரர்

/ எதிர் /

விஜயலட்சுமி ..... எதிரி

**<u>வழக்கின் சுருக்கம்</u>**

<table>
<tr><th>வ. எண்</th><th colspan="2">விவரம்</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td colspan="2">இருதரப்பினர்களின் பெயர்கள்</td></tr>
<tr><td><u>புகார்தாரர்</u>:<br><br>நாகம்மாள் (58/2026),<br>க/பெ.முத்துமல்லு,<br>கதவு எண்.47/3, 15-வது வார்டு,<br>வேலப்பன் தெரு,<br>ஜக்கமநாயக்கன்பட்டி,<br>போடி டவுன், தேனி மாவட்டம்.</td><td><u>எதிரி</u>:<br><br>விஜயலட்சுமி (53/2026),<br>க/பெ.(லேட்).செல்வம்<br>ஆசிரியர், அரசினர் மேல்நிலைப் பள்ளி,<br>போடி TO அம்மாபட்டி ரோடு,<br>சில்லமரத்துப்பட்டி,<br>போடி தாலுகா, தேனி மாவட்டம்.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 2. | எதிரியின் வயது | 53/2026. |
| 3. | தந்தை/கணவர் பெயர் | க/பெ.செல்வம். |
| 4. | மதம் | இந்து. |
| 5. | தொழில் | ஆசிரியர் – அரசினர் மேல்நிலைப் பள்ளி. |
| 6. | முகவரி | போடி TO அம்மாபட்டி ரோடு, சில்லமரத்துப்பட்டி. |
| 7. | தாலுகா, மாவட்டம் | போடிநாயக்கனூர், தேனி. |
| 8. | சம்பவம் நிகழ்ந்த நாள் | பொருந்தாது. |
| 9. | கைது | -- |
| 10. | பிணையில் விடுவித்தல் | -- |
| 11. | எதிரி சிறையில் இருந்த நாட்கள் | -- |
| 12. | புகார் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 12.10.2022. |
| 13. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி | 04.11.2022. |
| 14. | அழைப்பாணையுடன் நகல் வழங்கப்பட்ட தேதி | 30.01.2023. |
| 15. | கு.வி.மு.ச பிரிவு 251-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 06.12.2024. |
| 16. | விசாரணை துவக்கம் | 06.01.2025. |
| 17. | சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நாள் | Witness: PW1 – Chief: 27.03.2026 – Cross: 27.03.2026 |
| 18. | விசாரணை முடிவு | 17.07.2026. |
| 19. | கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 05.06.2026. |

| | | |
|---|---|---|
| 20. | பிற மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள் | இல்லை. |
| 21. | தீர்ப்பு விவரம் | விடுதலை. |
| 22. | தீர்ப்புரை நகலை வழங்குதல் | இல்லை. |
| 23. | தலைமறைவாக இருந்த எதிரியின் விவரங்கள் | 19.12.2023 முதல் 22.04.2024 வரை எதிரி பிடிகட்டளை நிலுவையில் இருந்தது. |
| 24. | மேல் நீதிமன்றத்தின் தடை மற்றும் அதன் முடிவு | இல்லை. |
| 25. | பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீட்டிற்கான உத்தரவு | இல்லை. |
| 26. | காலதாமதத்திற்கான காரணம் | 2026-ஆம் வருடத்தில்தான் புகார்தாரர் தரப்பு சாட்சி விசாரணை செய்யப்பட்டதும் மற்றும் 19.12.2023 முதல் 22.04.2024 வரை எதிரி பிடிகட்டளை நிலுவையில் இருந்ததும். |

*****

இவ்வழக்கு 04.11.2022 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 24.07.2026 அன்று விசாரணைக்கு வந்தபோது, புகார்தாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.P.ஜெயப்பிரகாஷ் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.A.முருகன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

## தீர்ப்புரை

1). இவ்வழக்கானது புகார்தாரர் சார்பில் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138

மற்றும் 142 உ/இ கு.வி.மு.ச பிரிவு 200-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2). **மனுவின் சுருக்கம்**:

2.1). இவ்வழக்கின் எதிரி, புகார்தாரருக்கு குடும்ப நண்பர் என்ற பழக்க வழக்கத்தின் அடிப்படையில், எதிரி தமது குடும்ப செலவிற்காகவும், சில்லரைக் கடன்களைத் தீர்க்கவும் வேண்டி புகார்தாரரிடம் கடந்த 23.06.2022 அன்று புகார்தாரரின் வீட்டில் வைத்து ரூ.3,00,000/-த்தை கைமாற்றுக் கடனாக ரொக்கமாக எதிரி பெற்றுக்கொண்டதாகவும், பின்னர் எதிரி கடனிற்கு ஆதரவாக கடந்த 23.08.2022 அன்று புகார்தாரரின் வீட்டிற்கு சென்று, 23.08.2022-ஆம் தேதியிட்ட போடிநாயக்கனூர் கிளையின், ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியின் 283532 என்ற எண் கொண்ட காசோலை ஒன்றை ரூ.3,00,000/-த்திற்கு எதிரி பூர்த்தி செய்து புகார்தாரரிடம் நேரடியாக கொடுத்ததாகவும், பின்னர் எதிரி உறுதியளித்ததன்பேரில், மேற்படி காசோலையை பணமாக்கும் பொருட்டு புகார்தாரர் கணக்கு வைத்திருக்கும் கரூர் வைஸ்யா வங்கி, போடிநாயக்கனூர் கிளையில், வங்கி கணக்கு எண்.1115155000121884-ல் 23.08.2022 அன்று வசூலுக்குச் செலுத்தியபோது, எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை “Funds Insufficient” என்ற காரணத்தினால் மேற்படி காசோலையானது 25.08.2022 அன்று திருப்பப்பட்டுவிட்டதாகவும், பின்னர், மேற்படி காசோலைக்குரிய தொகையைக் கேட்டு 12.09.2022 அன்று எதிரிக்கு புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி கடந்த 13.09.2022 அன்று பெற்றுக்கொண்டு, இதுவரை பதிலறிவிப்பு எதுவும் அனுப்பாமலும், மேலும், இதுவரை எதிரி காசோலைக்குரிய தொகையைத் திருப்பிச் செலுத்தாமல், புகார்தாரரை ஏமாற்றி மோசடி செய்துள்ளதாகவும்,

2.2). எனவே, எதிரியின் செய்கையானது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றமாகும் என்றும், எனவே, புகார்தாரருக்கு ஏற்பட்ட

இழப்புக்கு எதிரிக்கு தண்டனை வழங்கி, உரிய இழப்பீட்டை எதிரியிடமிருந்து பெற்றுத்தர வேண்டி புகார்தாரர் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

3). எதிரிக்கு அழைப்பாணையுடன் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டு, அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானபோது, எதிரி மீது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றத்தின் சாரம்சம் குறித்து 06.12.2024-ஆம் தேதி விளக்கி கூறி வினவியபோது, எதிரி பொய் வழக்கு என்று கூறியுள்ளார். எனவே, புகார்தாரர் தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4). **<u>புகார்தாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**:–

புகார்தாரர் தரப்பு சாட்சிகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, புகார்தாரர் நாகம்மாள் என்பவர் ம.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, ம.சா.1–ன் மூலமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையான சான்றாவணங்கள் குறியிடப்பட்டுள்ளன.

5). புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்குப் பாதகமாக உள்ள அம்சங்களைத் தொகுத்து 05.06.2026-ஆம் தேதி கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் வினவியபோது, பொய் சாட்சி என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உண்டு என்றும் கூறினார். எனவே, எதிரி தரப்பு சாட்சிய விசாரணைக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு, எதிரி தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. போதிய வாய்ப்பளித்தும் எதிரி எந்த ஒரு சாட்சியத்தையும் முன்னிலைப்படுத்தவில்லை.

6). **<u>எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**:–

எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7). இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

8). **தீர்வுக்குரிய பிரச்சனை**:

8.1). இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றச்சாட்டானது புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

8.2). மனுவில் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

9). **தீர்வும் அதன் காரணமும்**

9.1). வழக்கு காசோலை எதிரியின் வங்கிக் கணக்கிற்குரிய காசோலைதான் என்பது எதிரி தரப்பில் மறுக்கப்படவில்லை. மேலும், ம.சா.ஆ.1 வழக்கு காசோலையானது 23.08.2022-ஆம் தேதியிடப்பட்டுள்ள நிலையில், மேற்படி காசோலையை புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள போடிநாயக்கனூர் கிளை, கரூர் வைஸ்யா வங்கியில் வசூலுக்குச் செலுத்தியுள்ளார் என்பதும், மேற்படி காசேலையானது 25.08.2022-ஆம் தேதியில் Funds Insufficient என்ற குறிப்புடன் திரும்பியுள்ளது என்பதை ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 வரையான ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

9.2). காசோலை திருப்பப்பட்டவுடன் எதிரிக்கு வழக்கறிஞரின் அறிவிப்பு சட்ட

முறையான காலத்தில் சார்பு செய்யப்பட்டுள்ளதா? என்பது குறித்துப் பரிசீலனை செய்கையில், ம.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பானது 12.09.2022-ஆம் தேதி புகார்தாரரால் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், அதனை எதிரி 13.09.2022-ஆம் தேதி பெற்றுக் கொண்டுள்ளார் என்பதையும் ம.சா.ஆ.3 முதல் ம.சா.ஆ.5 வரையான ஆவணங்கள் வாயிலாக அறிய முடிகிறது. எனவே, புகார்தாரர் சட்டமுறையான காலத்தில் சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பதும், அதனை எதிரி பெற்றுக்கொண்டுள்ளார் என்பதும் மேற்படி சான்றாவணங்களின் வாயிலாக புகார்தாரர் தரப்பு நிரூபித்துள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.3). மேலும், வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், வழக்கானது 12.10.2022-ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தால் 04.11.2022-ஆம் தேதி முறையாக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எனவே, வழக்கானது உரிய காலத்திற்குள் புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது. வழக்கு காசோலையானது எதிரி, புகார்தாரருக்கு கொடுக்க வேண்டிய சட்டப்படியான கடனிலிருந்து விடுபடக் கொடுக்கப்பட்டதா? என்பது குறித்து பரிசீலனை செய்கையில், எதிரி காசோலையையும், அதிலுள்ள கையொப்பத்தையும் மறுக்கவில்லை. மேலும், கு.வி.மு.ச பிரிவு 251-ன் கீழ் வினவியபோது, பொய் வழக்கு என்று மட்டுமே கூறியுள்ளார். மேலும், எதிரியை கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் வினவியபோது, எதிரி பொய் சாட்சி என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உண்டு என்றும் குறிப்பிட்டுள்ளாரே தவிர, வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் தன்னுடையதல்ல என எதிரி மறுக்கவில்லை. எனவே, மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 118 மற்றும் 139-ன் கீழான சட்டப்படியான அனுமானம் புகார்தாரருக்கு ஆதரவாக எழுகிறது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.4). மேற்படி சட்டப்பூர்வமான அனுமானத்தை மறுத்துரைக்கும் வகையில், எதிரி தனது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய நேரடியாக சாட்சிகளை முன்னிலைப்படுத்த

வேண்டியதில்லை. மாறாக வழக்கை இதர சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாகவோ, அல்லது சூழ்நிலை, சந்தர்ப்பத்தின் வாயிலாகவோ மறுத்துரைக்கலாம் என்று மாண்பமை உச்ச நீதிமன்றம் பல்வேறு முன் வழக்குகளில் வழிவகை செய்துள்ளது. எதிரி தரப்பில் புகார்தாரருக்கு ஆதரவான அனுமானம் மறுக்கப்பட்டுள்ளதா? என்பது குறித்துப் பரிசீலனை செய்கையில்,

9.5). எதிரி தரப்பில் புகார்தாரர் எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு வசதியானவர் இல்லை என்பதாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. இது குறித்து புகார்தாரர் நாகம்மாள் என்பவரது குறுக்கு விசாரணையில், "**எதிரி என்னிடம் பணம் வாங்கவில்லை என்றும், நான் அவருக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு வசதி உள்ளவர் இல்லை என்றும், வேறு நபரிடம் வாங்கிய கடனுக்கு கொடுக்கப்பட்ட காசோலையை என் மூலமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல**" என சாட்சியம் அளித்துள்ளார்.

9.6). மேலும், இது குறித்து ம.சா.1 நாகம்மாள் தனது குறுக்கு விசாரணையில், "**23.06.2022-ஆம் தேதி எதிரி என்னிடம் பணம் வாங்கினார். எந்த தேதியில் பணம் கேட்டார் என்றால், 2 நாட்களுக்கு முன்பாக பணம் கேட்டார். நான் அதன் பிறகு பணம் கொடுத்தேன். 3 லட்சம் ரூபாயை நான் 2000 ரூபாய் நோட்டாக கொடுத்தேனா? 1000 ரூபாய் நோட்டாக கொடுத்தேனா? என்றால், 1000 ரூபாய் நோட்டாகவும், 500 ரூபாய் நோட்டாகவும் கொடுத்தேன். 1000 ரூபாய் எவ்வளவு கொடுத்தேன்? 500 ரூபாய் எவ்வளவு கொடுத்தேன்? என்றால், ஞாபகம் இல்லை**" என சாட்சியம் அளித்துள்ளார். அதாவது, 23.06.2022-ஆம் தேதி, எதிரிக்கு ரூ.3,00,000/-ம் பணம் கொடுத்ததாகச் சொல்லும் புகார்தாரர், அதனை 1000 ரூபாய் நோட்டுகளாகவும், 500 ரூபாய் நோட்டுகளாகவும் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

9.7). மேலும், இது குறித்து எதிரி தரப்பில், இந்தியாவில் பண மதிப்பிழப்பு

நடவடிக்கை மேற்கொண்டபோது 08.11.2016-ஆம் தேதி 1000 ரூபாய் நோட்டுகள் மதிப்பிழப்பு செய்யப்பட்டது என்றும், அதன் பிறகு 1000 ரூபாய் நோட்டுகள் புழக்கத்தில் இல்லை என்னும் சூழ்நிலையில், 2023-ஆம் வருடத்தில் 1000 ரூபாய் நோட்டுகளாக பணத்தை கடனாக கொடுத்ததாகச் சொல்லும் புகார்தாரர் தரப்பு சாட்சியம் ஏற்புடையது அல்ல எனக் குறிப்பிடும் எதிரி தரப்பு வாதம் ஏற்புடையது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.8). மேலும், புகார்தாரர் நாகம்மாள் தனது குறுக்கு விசாரணையில், "**என் கணவர் இறந்து ஒரு வருடமாகிறது. என் கணவர் விவசாய கூலி வேலை செய்து வந்தார். காடுகளை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வந்தோம். எனக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளனர். அவர்களை தற்போதுதான் திருமணம் செய்து கொடுத்தேன் என்றால், சரியல்ல. ஒரு பெண் குழந்தைக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளது. இன்னொரு பெண்ணுக்கு ஒரு பையன் உள்ளார். கடந்த 4, 5 ஆண்டுகளாக வருமானம் இல்லாமல் கஷ்டத்தில் உள்ளேன் என்றால், சரிதான்**" என சாட்சியம் அளித்துள்ளார்.

9.9). எனவே, கடந்த 4, 5 வருடங்களாகவே வருமானம் இல்லாமல் கஷ்டத்தில் இருந்து வரும் புகார்தாரர், எதிரிக்கு ரூ.3,00,000/-ம் ரூபாய் கடன் கொடுத்ததாகச் சொல்லும் விபரம் சாதாரண மனிதன் நம்பும் விதத்தில் இல்லை எனக் குறிப்பிடும் எதிரி தரப்பு வாதம் ஏற்புடையது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.10). எனவே, உரிய வருமானம் இல்லாமல் கஷ்டத்தில் இருந்து வரும் நபர் ரூ.3,00,000/-ம் கடன் கொடுத்ததாகச் சொல்லும் விபரமும், 2016-ஆம் ஆண்டிலேயே 1000 ரூபாய் நோட்டுகள் வழக்கொழிந்த பிறகு 2023-ஆம் வருடம் கொடுத்ததாகச் சொல்லும் கடனுக்கு 1000 ரூபாய் நோட்டுக்களை கொடுத்ததாகச் சொல்லும் புகார்தாரரின் சாட்சியம் நீதிமன்றம் ஏற்கும் வகையில் இல்லை என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.11). எனவே, புகார்தாரர் எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு வசதி உள்ளது என்பதை நிரூபிக்கவில்லை என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, புகார்தாரருக்கு ஆதரவான மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881 பிரிவு 139-ன் கீழான அனுமானம் எதிரி தரப்பில் முறையாக மறுத்துரைக்கப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

10).**<u>தீர்வு</u>**:

10.1). முடிவாக, எதிரியை மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(1)-ன் கீழ் இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது. புகார்தாரருக்கு இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கதல்ல என்றும் இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

10.2). இவ்வழக்கில் தடயப் பொருள் தாக்கல் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் 2026 ஆகஸ்ட் திங்கள் 07-ஆம் நாளாகிய இன்று அவையறியப் பகரப்பட்டது.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.08.07 17:58:01 +0530

நீதித்துறை நடுவர்,
போடிநாயக்கனூர்.

**1). புகார்தாரர் தரப்பு சாட்சிகளின் பட்டியல்**:

| | | | |
|---|---|---|---|
| 1. | ம.சா.1 | திருமதி.நாகம்மாள் | புகார்தாரர் |

**2). புகார்தாரர் தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்**:

| | | | |
|---|---|---|---|
| 1. | ம.சா.ஆ.1 | 23.08.2022-ஆம் தேதியிட்ட State bank of India, போடிநாயக்கனூர் கிளை, ரூ.3,00,000/-க்கான காசோலை எண்.283532 அசல். | ம.சா.1 |
| 2. | ம.சா.ஆ.2 | 25.08.2022-ஆம் தேதியிட்ட Karur vysya Bank, போடிநாயக்கனூர் கிளையின் காசோலை Funds Insufficient என திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை அசல். | ம.சா.1 |
| 3. | ம.சா.ஆ.3 | 12.09.2022-ஆம் தேதியிட்ட சட்டஅறிவிப்பு அலுவலக நகல். | ம.சா.1 |
| 4. | ம.சா.ஆ.4 | 12.09.2022-ஆம் தேதியிட்ட அசல் அஞ்சல் ரசீது. | ம.சா.1 |
| 5. | ம.சா.ஆ.5 | 13.09.2022-ஆம் தேதியில் எதிரி சட்ட அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான Track Consignment இணையதள பதிவிறக்க நகல். | ம.சா.1 |

**3). புகார்தாரர் தரப்பு சான்றுப்பொருள்களின் பட்டியல்**: தாக்கல் இல்லை.

**4). எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருட்களின் பட்டியல்**: தாக்கல் இல்லை.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.08.07 17:58:08 +0530

நீதித்துறை நடுவர்,
போடிநாயக்கனூர்.